**இணைப்பு – I**

**வடக்கு மாகாணப் பாடசாலைகளில் காணப்படும் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தல்-2023**

1. பிரயோகப் பரீட்சை தொடர்பான விபரம் வருமாறு:

i. பிரயோகப் பரீட்சையாக விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட்ட தலைப்பின் கீழ் சமர்ப்பிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடர் எண் | பிரயோகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் நியதிகள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | சித்தியடைவதற்கு தேவையான புள்ளி அளவு |
|---|---|---|---|
| 01 | நோக்கம் மற்றும் பிரவேசம் (Objective and the approach) | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு (Personality and voice control) | 05 | 02 |
| 03 | தொடர்பாடலில் தெளிவு (Clarity in the communication) | 05 | 02 |
| 04 | நேர முகாமைத்துவம் (Time management) | 05 | 02 |
| 05 | முன்வைப்பு நுட்ப முறைகளின் பயன்பாடு (Usage of Techniques of Presentation) | 05 | 02 |
| **மொத்தப் புள்ளிகள்** | | **25** | **10** |

ii. பிரயோகப் பரீட்சை முறைகள்:

1. பிரயோகப் பரீட்சைக்காக **05** நிமிடங்களுக்கு குறையாத காலம் வழங்கப்படும்.
2. பிரயோகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளக்கூடிய உயர்ந்த பட்ச புள்ளிகளின் அளவு 25 ஆகும்.
3. பிரயோகப் பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு நியதிகளிற்கும் குறைந்த பட்சம் 2 புள்ளிகள் வீதம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

iii. நியதிகளின் நோக்கம்:

1. நோக்கம் மற்றும் பிரவேசம் (Objective and the approach)
   வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தை தெளிவுபடுத்தல் மற்றும் பாட பிரவேச இயலுமையினை மதிப்பீடு செய்தல்.
2. ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு (Personality and voice control)
   ஆசிரியராக சிறந்த ஆளுமை கொண்ட மற்றும் கற்பிப்பதற்கு சிறந்த குரல் கட்டுப்பாடுகள் கொண்ட இயலுமையை மதிப்பீடு செய்தல்
3. தொடர்பாடலில் தெளிவு (Clarity in the communication)
   கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் உரிய விடயங்களை பயன்மிக்கதாக தெரிவிக்கக்கூடிய இயலுமையினை மதிப்பீடு செய்தல்.
4. நேர முகாமைத்துவம் (Time management)
   வழங்கப்படும் கால எல்லைக்குள் நோக்கத்தை எட்டக்கூடிய திறமைகளை மதிப்பீடு செய்தல்.
5. முன்வைப்பு நுட்ப முறைகளின் பயன்பாடு (Usage of Techniques of Presentation)
   நோக்கத்தை எட்டுவதற்கான சமர்ப்பிப்புக்கள் கலைசார் முறைகளை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான இயலுமைகளை மதிப்பீடு செய்தல்.

**குறிப்பு:**

1. விண்ணப்பதாரர்கள் தாங்கள் விண்ணப்பித்துள்ள பாடத்திற்கு அமைவாக அப் பாடத்திற்குரிய ஆசிரியத் தொழிலை ஆற்றுவதற்கான தகைமைகளைக் கொண்டுள்ளாரா என்பதனை பரிசீலிக்கும் வகையில் மேலே 1.i இல் தரப்பட்ட 5 நியதிகளிற்கு அமைவாக பிரயோகப் பரீட்சை நடைபெறும்.

2. பிரயோகப் பரீட்சைக்கான பாடத்திட்டம் இணைப்பு – II இல் காட்டப்பட்டுள்ளது

3. இப் பிரயோகப் பரீட்சையில் தாங்கள் வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டை ஒத்த வடிவில் தயார்ப்படுத்தி வருகை தருதல் போதுமானதாகும். காட்சிப்படுத்தல் மூலம் விளங்கப்படுத்த விரும்பினால் தாம் தெரிவு செய்த பகுதியை பிறிசில் போட் / காட் போட் அட்டை மூலமாக காட்சிப்படுத்தி விளங்கப்படுத்த முடியும். இதற்கான பொருட்களை தாங்களே கொண்டுவருதல் வேண்டும். மேலும் **கணினி மற்றும் பல்லூடக எறியி (Computer & Multimedia projector) மூலம் காட்சிப்படுத்தலை மேற்கொள்ள விரும்பினால் அவ்வாறு காட்சிப்படுத்தலை மேற்கொள்ளலாம். இவ் உபகரணம் தங்களுக்கு தயார் நிலையில் வழங்கப்படும். எனவே விண்ணப்பதாரர் கற்பித்தல் தொடர்பான முன்னளிக்கையினை (Presentation) பொருத்தமான முறையில் கொண்டு வருதல் அவசியமாகும்.**

4. இதில் தெரிவிக்கப்படாத விடயங்கள் ஏதேனும் இருப்பின் அவை தொடர்பில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.